# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் 31.8.2006 அன்று படித்தளித்த அறிக்கை

சென்னை மாநகரத்தில் தொடர்ந்து பெருகி வரும் மக்கள் தொகை, போக்குவரத்து நெரிசல் இவற்றின் காரணமாக குடிநீர், சாலைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் பற்றாக்குறை – இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, சென்னையைச் சுற்றி துணை நகரங்களை (Satellite Cities) அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை, அதன் தொடர்ச்சியாக ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை ஆகியவற்றில் அறிவிக்கப்பட்டிருந்தது.

2001ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சென்னை மாநகரத்தின் (Chennai City) மக்கள் தொகை 43 இலட்சத்து 43 ஆயிரம் ஆகும்; சென்னைப் பெருநகரத்தின் (Chennai Metropolis) மக்கள் தொகை 70 இலட்சத்து 40 ஆயிரம் ஆகும். அடுத்த 20 ஆண்டுகளில் சென்னை மாநகரின் மக்கள் தொகை 58 இலட்சத்து 50 ஆயிரமாகவும்; சென்னைப் பெருநகரத்தின் மக்கள் தொகை 125 இலட்சத்து 8 ஆயிரமாகவும் உயரும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் தற்போது மக்கள் தொகை அடர்த்தி (Density of Population) ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 28 ஆயிரத்து 125 பேர் என்ற விகிதத்தில் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் மிக அதிக மக்கள்தொகை அடர்த்தி உள்ள நகரங்களில் சென்னையும் ஒன்றாகும். மக்கள் தொகை பெருக்கத்தால் உள்கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் தற்போது திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றத் தேவையான இடவசதியும் இல்லை.

இவ்வகை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வு மேற்கொண்டு, வண்டலூர் – கேளம்பாக்கம் சாலைக்குத் தென்பகுதியில், பழைய மாமல்லபுரம் சாலைக்கும் எண்.45 தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையில் உள்ள சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலத்தை உத்தேசமாகத் தேர்வு செய்துள்ளது.

உத்தேசமாகத் தேர்வு செய்துள்ள பகுதியில் தற்போது 13 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றார்கள். 270 சதுர கிலோமீட்டரில் அமைந்துள்ள இந்த நிலப்பரப்பு மாசற்ற, நல்ல சுற்றுப்புறச் சூழலில் அமைந்துள்ளது. இது புதிய நகர அமைப்பிற்கு உகந்த பகுதியாகும். இப்பகுதியில் பெரும்பாலான நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாகவே உள்ளன. உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களை கையகப்படுத்தும்போது நீர்வளப் பகுதி, குடியிருப்புப் பகுதி, காடுகள் உள்ள பகுதி ஆகியவற்றை நீக்கிவிட்டு – தரிசாகவும் புஞ்சையாகவும் உள்ள நிலங்களே கையகப்படுத்தப்பட உள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்களுக்கு நியாயமான மார்க்கெட் விலை வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட மாட்டார்கள்; அவர்கள் அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து வாழ்ந்து வரலாம். ஏற்கனவே மக்கள் வாழ்ந்து வரும் இந்தப் பகுதிகள் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய துணை நகரத்தின் வளர்ச்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்து கட்டமைப்பு வசதிகளும் மேம்பாடு செய்யப்பட்டு, அவர்கள் பயனடையும் வகையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். புதிய நகரம் அமையும்போது உருவாகும் வேலைவாய்ப்புகள் இப்பகுதியில் ஏற்கனவே வாழ்ந்து வரும் மக்களுக்கு நல்ல பலனை வழங்கி, அவர்கள் பொருளாதார ரீதியாக உயர்வடைவதற்கும் வழிவகுக்கும்.

இந்தத் துணை நகரத் திட்டம் – வளர்ந்து வரும் சென்னைப் பெருநகரத்தின் நெரிசலைப் பெருமளவுக்குக் குறைப்பதோடு – உலகின் ஒரு முக்கிய தொழில் நகரமாகவும், தகவல் தொழில்நுட்ப நகரமாகவும் வளர்ந்து வரும் சென்னையை நோக்கி மேலும் தொழில் முதலீட்டாளர்களைத் தொடர்ந்து ஈர்த்திடவும், பொதுமக்களுக்குத் தரமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் பயன்படும்.

******